mahindra Rise

# பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல்களைத் தடுத்தல்



mahindra Rise

**மகேந்திரா & மகேந்திரா லிமிட்டெட் ("கம்பெனி") தனது அனைத்துப் பணி இடங்களிலும் பாதுகாப்பான, விரோத மனப்பான்மை இல்லாத மற்றும் துன்புறுத்தல் இல்லாத பணிச்சூழலை ஏற்படுத்தித் தருகின்றது.. பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல் நிகழ்ந்தால் அதனை சகித்துக் கொண்டு மௌனமாக இருக்கக் கூடாது என்ற அணுகுமுறையை நாங்கள் கடைபிடிக்கின்றோம். பாலியல் துன்புறுத்தல் என்பது பாலியல் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு நேரடியான அல்லது மறைமுகமான விரும்பத்தகாத, உடல்சார்ந்த, சொற்கள் சார்ந்த அல்லது சைகை மூலமான நடத்தை ஆகும்.**

## யாருக்குப் பொருந்தும்:

இந்தக் கொள்கையானது கம்பெனி மற்றும் அதன் துணை நிறுவனங்களுக்குப் பொருந்தும். கம்பெனியின் எந்தவொரு இருப்பிடத்திற்கும் (பணியிடங்கள்) வருபவர்கள் அல்லது பணிபுரிகின்றவர்கள் என அனைவருக்கும் இது பொருந்தும். இது பாலினப் பாகுபாடு இல்லாத கொள்கை ஆகும். இது பாலினச் சார்பு அல்லது முன்னுரிமைகள் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் அனைத்து ஊழியர்களுக்கும் பொருந்தும்.

## புகார்கள்:

பாலியல் துன்புறுத்தல் குறித்த எந்தவொரு புகாரும் பரிசீலிக்கப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டால் அது கம்பெனியின் நன்னடத்தை விதிகள் மற்றும் பணி விதிகளை மீறியதாக எடுத்துக் கொள்ளப்படும். சம்பந்தப்பட்ட நபர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்பட்ட, பாதிக்கப்பட்ட நபர் கூடிய விரைவில் உள்ளிழுப்பு புகார் குழுவின் (ஐசிசி) ஒரு உறுப்பினரை தொடர்பு கொள்ள வேண்டும். அந்த உறுப்பினர் புகாரை பதிவு செய்வதற்கு வழிகாட்டுவதோடு அந்தப் புகார் பைசல் செய்யப்படும் வரை தேவைப்படும் அனைத்து உதவிகளையும் பாதிக்கப்பட்டவருக்கு அளிப்பார். கடைசி சம்பவம் நிகழ்ந்த தேதியில் இருந்து மூன்று மாத காலத்திற்குள் சம்பந்தப்பட்ட ஐசிசி-க்கு எழுத்துப்பூர்வமான புகாரை அளிக்க வேண்டும். எந்தவொரு மண்டல ஐசிசி-யிலும் பணிச்சுமை அதிகமாக இருக்கும் சூழலில் முதன்மை நன்னடத்தை அதிகாரி புதிய புகார் ஒன்றை மற்றொரு மண்டல ஐசிசி-க்கு பரிசீலனைக்கு அனுப்பி வைக்கலாம் அல்லது சம்பந்தப்பட்ட ICC-க்கு மற்றொரு மண்டல ஐசிசி-ல் இருந்து தற்காலிகமாக உறுப்பினர்களை நியமித்து விசாரணை மேற்கொள்ளச் செய்யலாம். விசாரணையானது 90 நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும்.

## அந்தரங்கம்:

புகார் தொடர்பான அனைத்துத் தகவல்களும் அதிகபட்ச கவனத்துடனும் கண்ணியத்துடனும் விவேகத்துடனும் கையாளப்பட வேண்டும். எந்தவொரு தரப்பினரையும் அல்லது சாட்சியையும் அடையாளம் காணக்கூடிய வகையிலான எந்தவொரு தகவலும் எந்தவொரு வடிவிலும் பொதுமக்களுக்கோ, பத்திரிக்கைக்கோ அல்லது ஊடகத்திற்கோ தெரியப்படுத்த, வெளியிடக் கூடாது.

## பாதுகாப்பு:

தேவைப்பட்டால் மற்றும் பாதிக்கப்பட்டவர் / புகார் அளிப்பவர் எந்த வகையிலாவது தனக்கு அச்சுறுத்தல் இருக்கிறது என்று உணர்ந்தால் கம்பெனியானது அவருக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். விசாரணை நடைபெற்றுக் கொண்டு இருக்கும்போதே புகார் அளித்தவர் இடைக்கால நிவாரணம் கேட்டு ஐசிசி-யிடம் எழுத்துப்பூர்வமான வேண்டுகோளை சமர்ப்பிக்கலாம். இதனை ஐசிசி-யானது அந்தந்த புகாரின் அடிப்படையில் கவனத்தில் எடுத்துக்கொண்டு முடிவெடுக்கும்.

## சமரசத் தீர்வு:

புகார் அளிப்பவர் கேட்டுக் கொண்டால் விசாரணையைத் தொடங்குவதற்கு முன்பே ஐசிசி இந்தப் பிரச்சனையை சமரசம் வாயிலாகத் தீர்த்து வைக்கும். அத்தகைய சமரசத்திற்கு அடிப்படையாக பணம் கொடுத்து முடித்து வைப்பது என்பது இருக்கக் கூடாது.

## தவறான அல்லது கெட்ட நோக்கத்திலான புகார்கள்:

தவறான அல்லது கெட்ட நோக்கத்திலான புகாரை மேற்கொள்கின்ற நபர் அல்லது போலி ஆவணங்கள் சமர்ப்பிக்கின்ற நபர் மீது பணிநீக்கம் உள்ளிட்ட தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## விழிப்புணர்வு & பயிற்சி

கம்பெனி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தும். பாலியல் துன்புறுத்தல் குறித்து அனைத்து ஊழியர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான பரஸ்பர உடையாடலை மேற்கொள்வதற்கான மன்றங்களையும் கம்பெனி ஏற்படுத்தித் தரும்.

இந்த போஷ் பாலிசியின் கீழ் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் மூலம் கூடுதல் விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.